DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No. 194/2022

Prosecution witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ராஜகோபாலன் என்ற ஆர்.ஜி.பாலன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.02.2024.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் 23.03.2000 தேதியிட்ட நடுவக்குறிச்சி சுந்தரம் நாடார் மகன் தங்கதுரை நாடார் என்பவர் பிறப்பித்து வைத்த ஆவண எண்.5/2000 உயில் ஆவணத்தை பற்றி எழுதிய எழுத்தர் என்ற நிலையில் நீதிமன்றத்தில் வந்து சாட்சியமளிக்க வரவேண்டுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. நான் தற்போது கொம்மடிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட கொம்மடிக்கோட்டையில் ஆவண எழுத்தராக இருந்து வருகிறேன். என்னுடைய ஆவண எழுத்தர் எண் பாளையங்கோட்டை மாவட்ட பதிவாளரால் வழங்கப்பட்ட உரிமம் எண். B553PLM 1984 ஆகும். நான் 1967 ஆம் ஆண்டு முதல் ஆவண எழுத்தராக இருந்து வருகிறேன். 23.03.2000 ஆம் தேதியில் சுந்தரம் நாடார் மகன் தங்கதுரை நாடார் அவருடைய பேரக்குழந்தைகள் அர்ஜுன் பெரியசாமி, ஆகாஷ் கண்ணன் ஆகியோர்களுக்கு உயில் எழுதி வைக்க வந்தார். உயில் எழுதுவதற்கான சொத்துக்களின் விவரங்களை சொன்னார். அவர் சொன்னபடியே உயில் பத்திரம் தயார் செய்து, அவரது பேரக்குழந்தைகளுக்கு அவரது தகப்பனார் வேலாண்டியை கார்டியனாக போட்டு உயில் ஆவணத்தை தயார் செய்து கொடுத்தேன். அந்த உயில் ஆவணத்தில் உயிலை எழுதிய சு.தங்கதுரை நாடார் முதலில் கையொப்பமிட்டார். பின்னர் சாட்சிகள் 2 பேர் சாட்சி கையொப்பம் போட்டார்கள். சாட்சிகளாக வேல்சுந்தர், தனபால் சுப்பிரமணியன் ஆகியோர்கள் கையொப்பமிட்டார்கள். அதன்பிறகு மேற்படி உயில் ஆவணத்தை எழுதியதாக நான் கையொப்பமிட்டு என்னுடைய பெயர், என்னுடைய தகப்பனார் பெயர், முகவரி, உரிமம் எண் ஆகியவற்றை போட்டேன். பின்னர் மேற்படி உயில்

ஆவணம் பதிவு செய்ததற்கான நகல் ஆவணத்தை என்னுடைய உதவியாளரான சிலுவைராஜ் என்பவர் தயார் செய்தார். அதன்பிறகு மேற்படி உயில் ஆவணத்தை எழுதி வைத்த தங்கதுரை என்பவர் கேட்டுக்கொண்டதன்பேரில் மேற்படி உயில் ஆவணத்தை கொம்மடிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் அன்றையதினமே மாலை 4.00 மணிக்கு பதிவுக்காக தாக்கல் செய்தோம். அதன்பின்னர் சார்பதிவாளர் பதிவு செய்ய உத்தரவிட்டார். அதன்பின்னர் உயில் ஆவணம் பதிவானது. ஆவண எண். 5/2000 என உயில் ஆவணம் பதிவானது. பதிவின்போது தங்கதுரை நாடார் மற்றும் சாட்சிகள் சார்பதிவாளர் அலுவலகத்தில் கையொப்பமிட்டார்கள். அதற்கான பதிவு கட்டணத்தை தங்கதுரை நாடார் செலுத்தினார். பதிவு முடிந்தபின்னர் அசல் உயில் ஆவணத்தை தங்கதுரை நாடார் வாங்கி சென்றார்.